

Theni School Students





Tirunelveli Tuticorin





Chennai Kumily



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10th Aug. 2016

*Our Radio & TV Programs*
Sri Lanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M & Nambikkai TV
on Monday &
Saturday 7.30 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

**To**

Postman Remarks (If Undelivered):

- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 16 ஆகஸ்ட் 2016 கனி 9

## புழுக்கொத்தி






## Hoopoe

**THE WORD OF CHRIST**

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக" - கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்



# World Evangelism Gospel Media



## Arjunan in Tamil on Nambikkai TV & Radio:

TV:On Monday & Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

## Sunny, Francis & Vinay David in Hindi on TV:

Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on shubhSandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

## P.K.Varghese in Malayalam on TV:

Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

## Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Puthuyugam TV:

Every Sunday 6.45-7.00 a.m and Every Tuesday 6.15-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

## Rajanayagam in Tamil on Tamilan TV:

Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

## P.R.Swamy & Douglas in Tamil on Radio:

Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

## Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:

Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*


**THE WORD OF CHRIST**
Monthly Magazine

**Editor**
**B.ARJUNAN**

**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்தியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழின் உள்ளே...


ஆசிரியருரை
ஜெ.சி.சோட்,
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட்ஸ், பவுலா பேட்ஸ்
அவர்களின் செய்தி மற்றும்
வேதபாடம்,
வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 192

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை செப்டம்பர் மாத இதழில்!

1. மனுஷர் யாவரும் புசித்துக் குடித்துத் தங்கள் பிரயாசத்தின் பலனையும் அனுபவிப்பது எவருடைய அநுக்கிரகம்?
2. நீங்கள் பழிவாங்காமல், எதற்கு இடங்கொடுங்கள் என பவுல் எழுதுகிறார்?
3. வாசிக்கத் தெரியாதவனிடத்தில் புஸ்தகத்தை கொடுத்து நீ இதை வாசி என்றால், அவன் என்ன சொல்லுவான்?
4. விவாகமில்லாதவன் கர்த்தருக்கு எப்படி பிரியமாயிருக்கலாமென்று, எவருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்?
5. எரேமியாவுக்கு தினம் ஒரு அப்பத்தை அவனுக்கு வாங்கிக்கொடுக்கவும் கட்டளையிட்ட இராஜா யார்?
6. எங்கள் சரீரத்திற்கு இளைப்பாறுதல் ஒன்றுமில்லாமல், எப்பக்கத்திலேயும் உபத்திரவப்பட்டோம்; புறம்பே போராட்டங்களும், பயங்களும் இருந்தன என எழுதும் அப்போஸ்தலன் யார்?
7. என் பெலனும் நான் கர்த்தருக்குக் காத்திருந்த நம்பிக்கையும் அழிந்துபோயிற்று என்று புலம்பும் தீர்க்கன் யார்?
8. விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளுகிற எந்த மனுஷனும் நியாயப்பிரமாணம் முபவதையும் நிறைவேற்ற என்னவாயிருக்கிறான்?
9. துன் மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தைவிட்டு விலகி, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் தன் ஆத்துமாவைப் பிழைக்கப்பண்ணுவானா?
10. இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை எவர் மூலமாக பெற்றிருக்கிறோம்?

### போட்டியாளர்கள் கவனிக்க... வேதாகமம் பரிசு

ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை 100 பேருக்கு அறிமுகம் செய்கிறவர்கள் இதழை படிக்க விருப்பமில்லாதவர்களுடைய முகவரிகளை எழுதி அனுப்பவேண்டாம். நன்றி. – ஆசிரியர்

### இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும் 10


நாள்: ஜூன் 27 -ம் தேதி, சனிக்கிழமை
நேரம்: காலை 10 மணிமுதல் மாலை 2.00 மணி வரை
கிறிஸ்துவின் சபையார் கூடமிடம்
273/2 கே.கே.நகர்
செங்கல்பட்டு -603 001
காஞ்சிபுரம் மாவட்டம்
ஊழியர் சகோ.S.பலராமா
தொடர்புக்கு: 9994454724



### புழுக் கொத்தி

- இது அழகான ஆனால் விசித்திரமான பறவை.
- இதன் உடற்பகுதி கருப்பு நிறமுடையதும், இதன் கொண்டை உயரமான பொன்நிறமானதும், அதன் நுனிப்பகுதி கருப்பு நிறமாகவுமிருக்கும்.
- இதன் இறக்கைகள் வெண்மை மற்றும் கருப்பு நிறமான கோடுகளைக் கொண்டதாக இருக்கும்.
- இதனுடைய வளைந்த நீளமான அலகினை வைத்து அடையாளம் கொள்ளலாம்.
- பொதுவாக இப்பறவை ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பா கண்டங்கள் முழுவதும் காணப்படுகின்றன.
- பழைய பிரமாணத்தின்படி இப்பறவையும் புசிக்கத்தகாத அருவருப்பான பறவையுமாகும். (லேவி.11:19)





Hoopoe

சிறுவர் பகுதி

## நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்

*வேதபகுதி: யோவான் 13:21-30*



ஒரு முறை இயேசு பன்னிரண்டு சீஷர்களோடு இருக்கும்போது அவர் ஆவியில் கலங்கி: உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்றார். அப்பொழுது யாரைக் குறித்துப் பேசுகிறாரோ என்று சீஷர்கள் ஐயப்பட்டு ஒருவரையொருவர் நோக்கிப் பார்த்தார்கள். அந்தச் சமயத்தில் இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த யோவான் அவருடைய மார்பிலே சாய்ந்து கொண்டு ஆண்டவரே அவன் யார் என்று கேட்டான். இப்படி கேட்கும்படியாக சீமோன் பேதுரு அவனுக்குச் சைகைகாட்டினான்.

இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன் தான் என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார். அதை அவன் வாங்கினபின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான். அப்பொழுதுதான் இயேசு அவனை நோக்கி நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார்.

ஏன் அவனைப் பார்த்து இப்படி சொன்னார் என்று தெரியுமா? அவன் இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான், பிசாசானவனும் அவன் இருதயத்தைத் தூண்டியிருந்தான். தான் பூமிக்கு வந்த நோக்கம் நிறைவேறத்தக்கதாகவும், தேவனுடைய ராஜ்யம் சீக்கிரத்தில் சம்பவிக்கதக்கதாகவும் அவர் அவனைப் பார்த்து நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்று சொன்னார். இவ்வசனத்தை நீங்கள் எடுத்துக்கொண்டு எதையும் சீக்கிரமாய்ச் செய்து விடாதீர்கள்.

உங்களில் ஒருவரும் இந்த யூதாஸைப்போல போய்விடாதிருக்க வேண்டுமென்பதுவே என்னுடைய வேண்டுதலாயிருக்கிறது. ஏனென்றால் பணஆசை எல்லாத்தீமைக்கும் வேராக இருக்கிறது என்று நாம் வேதத்தில் படிக்கிறோம். மேலும் பாவத்தின் சம்பளம் மரணம் என்று வாசிக்கிறோம். பாவத்தை சம்பாதித்த யூதாஸ் தன்உயிரை மாய்த்துக்கொண்டான். அவனுடைய முடிவு மிகவும் மோசமான முடிவாக போய்விட்டது. அப்போஸ்தல பட்டத்தை இழந்தான். நீங்கள் ஒரு பேதுருவைப்போலவும் பவுலைப்போலவும் மாறவேண்டும்.

**மனப்பாட வசனம்:** “அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்து போகாமல், கடைசிநாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது” (யோவான்6:40).



# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 16 ஆகஸ்ட் -2016 கனி - 9

ஆசிரியருரை

## செத்த ஈக்கள் – Dead Flies



"செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப்போகப்பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்" (பிர.10:1). ஒரு தைல வியாபாரியினுடைய தைலத்தை செத்த ஈக்கள் கெடுக்குமானால் அவனுடைய தைல வியாபாரம் பாதிக்கப்படும் எப்படியென்றால், அவனுடைய தைலத்தில் செத்த ஈக்கள் இருக்கும்போது அந்த தைலத்தை முழுவதுமாக நாறிக் கெட்டுப்போகப்பண்ணுமல்லவா? அதைப்போல சபையிலும் ஆவிக்குரிய விஷயத்தில் செத்தவர்கள் இருக்கும்போது சபைமுழுவதும் பாழடிக்கப்படும். ஆகையால் கர்த்தர் சர்தை சபையின் தூதனுக்கு எழுதும்போது; "தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்" என்கிறார் (வெளி.3:1).

இன்றைக்கும் சபையில் பல வருடங்களாக இருக்கிறவர்கள் உயிருள்ளவனென்று சொல்லி ஆவிக்குரிய விஷயத்தில் செத்தவர்களாயிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் ஆவியில் பெலப்படவேண்டும். இல்லையேல் அவர்களைப் பார்த்து மற்றவர்களும் ஆவிக்குரிய விஷயத்தில் சோர்ந்துபோவார்கள். மேலும் அடுத்தவசனத்தில்; "நீ விழித்துக்கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து; உன் கிரியைகள் தேவனுக்குமுன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை" என்கிறார் (வெளி.3:2). சபையில் இருக்கிற ஒவ்வொருவருக்கும் சில பொறுப்புகளை தேவன் கொடுக்கிறார். சிலர் மேய்ப்பராகவும், போதகராகவும், உதவிக்காரர்களாகவும் செயல்படுகிறார்கள். இவர்கள் மந்தையின் மீது கவனத்தை செலுத்தி அவர்களுடைய நிலைமையை அறியவேண்டும். சாகிறதற்கேதுவாக இருக்கிறவைகளை அடையாளம் கண்டு கொண்டு அவர்களை ஆவிக்குரிய விஷயத்தில் திடப்படுத்தவேண்டியவர்களாயிருக்கிறோம். அவர்கள் போனால் போகட்டும் என்று நாம் மெத்தனமாக இருந்துவிடக்கூடாது. ஏனெனில் ஒருவரும் கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல என காண்கிறோம். ஒவ்வொருவரும், "உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்

தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்" என பவுல் ரோமசபையாருக்கு எழுதுகிறதை படிக்கிறோம் (ரோம.6:11). ஞானஸ்நானத்திலே பாவத்திற்கு செத்து நீதிக்கு பிழைத்தவர்களாக இருக்கிறோம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறோம் என்பதை நாம் ஒவ்வொரு நாளும் எண்ணிப்பார்க்கவேண்டும். சிலர் நான் எதற்காக வாழ்கிறேன் என்று நொந்துகொள்வார்கள். உங்களை மீட்கும்படியாக இயேசுதாமே சிலுவையில் இரத்தம் சிந்தினார். உங்களை தேவனுடைய சமுகத்திற்கு கொண்டு சேர்க்கும்வரை அவர் உங்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார். இப்படிப்பட்ட நம்பிக்கையோடிருப்பீர்களானால் நீங்கள் சபையில் என்றும் உயிருள்ளவர்களாக இருப்பீர்கள். செத்தவர்களாயிருக்க மாட்டீர்கள்.

லூக்கா 12;1-ம் வசனத்தில் பரிசேயருடைய புளித்த மாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று கர்த்தர் முதலாவது தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னார். ஏன் அப்படிச் சொன்னார். இன்றைக்கு புளிப்புள்ள இவர்கள் மற்றவர்களையும் உப்பப்பண்ணுவார்கள். முழுவதையும் உப்பப்பண்ணி கெட்டுப்போகப்பண்ணுவார்கள். "நியாயசாஸ்திரிகளே, உங்களுக்கு ஐயோ, அறிவாகிய திறவுகோலை எடுத்துக்கொண்டீர்கள், நீங்களும் உட்பிரவேசிக்கிறதில்லை, உட்பிரவேசிக்கிறவர்களையும் தடைபண்ணுகிறீர்கள் என்றார்" (லூக்.11:52). ஆகையால் பரிசேயருடைய புளித்த மாவைக்குறித்து அதாவது அவர்களுடைய உபதேசத்தைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கச் சொன்னார். சபைகளில் பொதுவாக ஒருவரையொருவர் பார்த்து கற்றுக்கொள்ளுகிறார்கள். ஒருவர் ஒரு தவறை செய்துவிட்டால் மற்றவரும் அதே தவறை செய்வார். ஏன் அப்படி செய்தீர்கள் என்று கேட்டால். அவர் செய்தார் ஆகையால் நானும் செய்தேன் என்பார். அது வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்பதை பார்க்கமாட்டார்கள். இந்த பரிசேயர் போன்றோர் சொல்லுவார்கள் ஆனால் செயல்படமாட்டார்கள். இப்படிப்பட்ட போதகர்களுக்கு உலகத்தில் பஞ்சமில்லை. ஆண்டவர் ஊழியம் கொள்ள வராமல் ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கவும் இவ்வுலகிற்கு வந்தார். ஆகையால் அப்படிப்பட்ட சிந்தையோடு உயிருள்ளவர் களாயிருந்து செயல்படுவோம்.

பிரசங்கி சொன்ன அதே வசனத்தில்; "செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப்போகப்பண்ணுவதுபோல; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும் என்று சொல்லுவதை வாசிக்கிறோம். ஆம், எவ்வளவு பெரிய ஞானியாக இருந்தாலும் அவர்களுடைய சொற்ப மதியீனம் அவர்களுடைய ஞானத்தை அசட்டை செய்துவிடும். செத்த ஈக்களைப்போல அவர்களுடைய ஞானத்தை நாறிக்கெட்டுப்போகப்பண்ணும். சாலொமோன் ஞானி ஒரு சிறப்பான ஞானி, சிறப்பான ராஜா என்றெல்லாம் நாம் அறிகிறோம். ஆனால் அவனுடைய பின் நிலைமையைப் பார்க்கும்போது, அவனுடைய இருதயத்தை அவன் நேசித்த பெண்கள் வழுவிப்போகப்பண்ணினார்கள் (1இரா.11:3). இந்த சாலொமோன் சிறப்பான ஞானவானாக இருந்தும் அவனுடைய சொற்ப மதியீனமான காரியத்தினால் அவனுடைய ஸ்திரீகள் அவனுடைய இருதயத்தை தேவனுக்கு விரோதமாக செய்ய தூண்டினார்கள். ஆகையால் "முத்துக்களைப்பார்க்கிலும் ஞானமே நல்லது; இச்சிக்கப்படத்தக்கவைகளெல்லாம் அதற்கு நிகரல்ல" என்கிறார் (நீதி.8:11). ஒருவேளை ஞானம் அசட்டை பண்ணப்படலாம். அப்படி அசட்டை





## கர்த்தருக்கு கடன்கொடுத்த ஒரே பெண் அன்னாள்

-John S. Nathan, 94444 43378

**-சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**

மேலும் சாமுயேலை கர்த்தரிடத்திலிருந்து கேட்டேன். வசனம் 20 Because I have asked him of the Lord கர்த்தரிடத்தில் அவனை கேட்டேன். 1சாமு.1:20 என்று சொல்லி அவனுக்கு சாமுயேல் (வேல் அல்ல) என்று பேரிட்டாள். el யேல் என்பது தேவனை குறிக்கும் சொல்லாகும் ஆனால் "வேல்" என்பது மாபெரும் தவறாகும், குற்றமாகும். ... நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள்ஒன்றும் கூட்டவும், குறைக்கவும் வேண்டாம் உபா.4:2 நீதி.30;6, வெளி.22:18,19 என்கிற தேவ எச்சரிப்பை நாம் அசட்டை செய்யலாமா? கூடாதே சாமுயேல் என்ற பெயரில் சாமு "வேல்" எப்படி நுழைந்தது? நம்மை குத்திக்கொண்டிருக்கும் வேலை நீக்கி வேதனை நீங்கி வாழ வகைசெய்வோம்.

சாமுவேல், இஸ்ரவேல், இம்மானுவேல், யோவேல், பெத்தேல் இப்படி மேலும் பல "வேல்களை" இன்றே நீக்கிட முயலுவோம். அன்னாள் கர்த்தருக்குக் கடனாக கொடுத்த (சாமுயேலுடன்) மேலும் (வட்டியாக) மூன்று குமாரனையும், இரண்டு குமாரத்திகளையும் பெற்றிட செய்தார் 1சாமு.2:21 சாமுயேலை பெறும் முன்பு அன்னாள் தேவசமூகத்திற்கு பேனார் 1சாமு.1:3 அன்னாளுக்கு மேலும் குழந்தைகளை கொடுப்பதற்காக 1சாமு.2:21 கூறியுள்ளபடி And the Lord visited Hannah, so that she concieved and bare three sons and two daughters. கர்த்தர், ஆசீர்வதிப்பதற்காக அன்னாள் வீடு தேடி சென்றார். அப்படியே கர்த்தர் அன்னாளைக் கடாட்சித்தார். இதே கருத்தை இயேசு ... நீங்கள் போய்க்கனிகொடுக்கும்படிக்கும் உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன் கர்த்தர் அன்னாளின் வீட்டிற்குப்போகும்படியான வாய்ப்பை பெற்றவரை யார் மறந்தாலும் நாம் நான் மறக்க முடியுமா? கர்த்தருடைய கிருபை பெற கர்த்தருக்கு உங்கள் மகனை மக்களை கடனாக அளித்து அளவில்லா ஆசீர்பெறுங்கள். மறவாதீர் மறந்து இருந்துவிடாதீர் தேவ ஊழியத்திற்காக கொடுத்து ஆசீர்பெறுங்கள்.

## 3750 ஆண்டுகளாக பேசிடு தாகம் தீர்க்கும் கிணறு
## ௨. (நம்மால் மறக்க முடியாத வேதாக பெண்)

உலக இரட்சகர் இயேசு கிறிஸ்து தாமே முதன் முதலாக கூறிய நற்செய்தி நாசரேத்திலோ அல்லது எருசலேமிலோ அல்ல. அவரின் பிறப்பு முதல் சிலுவை மரணம் வரையில் அவரை பகைத்து வெறுத்து எல்லாவித இன்னல்கள் நாளும் செய்து இன்புற்றுவந்தனர். ஆனால் உலகமக்களால் விலக்கப்பட்டு தாழ்வாய் கருதப்பட்டு வாழ்ந்த மக்களின் குடியிருப்பின் வழியாக பயணிக்க விரும்பிய எம்பொருமான் இயேசுவுக்கு கோடை வெயிலை தாங்காது சோர்வுற்று நாவரண்ட நன்பகலில் அங்கு வந்த சமாரிய பெண்ணிடம் தாகத்துக்குத் தா என்றபோது அவருடைய உடுத்தியிருந்த ஆடையைக் கண்டும் அவர் தோற்றம் யூதருடைய தோற்றம் என உறுதிகொண்டு, தான் ஒரு இழிவான தாழ்ந்த இன சமாரிய பெண் என்றும், யூதர்கள் சமாரியரிடத்தில் ஒன்றும் கொள்ளுவதுமில்லை என்ற நெடுங்கால பழக்கம் இருந்து வருவதால் நீர் (உயர்குடி) யூதனாயிருக்க (இழிவான) சமாரியளாகிய என்னிடத்தில், தாகத்துக்குதா என்று எப்படிக் கேட்கலாம் (யோவான்4:9) ஆதலால் சாதாரண மான அவரை யூதராக காண்கிறாள்.

☐ ஆதியாகமம் 18:12-15 ஐ வாசியுங்கள்.

❖ அவள் தன் உள்ளத்திலே நகைத்து கர்த்தரிடத்தில் கேள்வி கேட்டாள்.

❖ அந்த மூன்று புருஷர்களும் அவள் என்ன நினைத்துக்கொண்டிருந்தாள் என புரிந்து கொண்டு ஏன் அவள் நகைத்தாள் என்று வினவினார்கள்.

❖ வசனம் 14 "கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?"

❖ வசனம் 15 சாராள் பயந்து தான் நகைக்கவில்லை என்று மறுத்தாள் விசுவாசம் என்பது நம்பிக்கை என்றும் அழைக்கப்படுகிறது.

2கொரி.5:7 - நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்

எபி.11:6 (வாசியுங்கள்) விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்.

எபி.11:11 - "விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து வயது சென்றவளாயிருந்தும் பிள்ளை பெற்றாள்"

எபி.11:15 "தாங்கள் விட்டுவந்த தேசத்தை (கல்தேயரின் ஊர் என்ற தேசம்) நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப் போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே"

❖ விசுவாசம் - வரவிருக்கிற நன்மையான காரியங்களை எதிர்பார்த்திருக்கிறது - குறிப்பாக பரலோக வீட்டை

❖ பிலிப்பியர் 3:12,13,14 - பவுல், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி நாம் தொடரவேண்டும் என்கிறார்.

☐. சாராளுடைய விசுவாசம் பலமுறை சோதிக்கப்பட்டது.

❖ அவள் மிகவும் அழகாயிருந்தபடியால் அந்திய ராஜாக்கள் அவளை விரும்பினார்கள்.

❖ அவள் தன் புருஷனைப் (வீட்டாரையல்ல) பின்பற்றினாள் எனவே இன்றும் குடும்பத்தைக் கட்டுகிறாள்.

❖ அவள் தான் ஒரு மலடியென்றும் தன்னால் ஒருபோதும் பிள்ளை பேற்றினை அடையமுடியாதென்றும் உணர்ந்தாள்.

❖ அதன்பின் கர்த்தரால் வாக்குத்தத்தைப் பெற்றபடியால் அவள் 90 வயதை அடையும்வரை 25 ஆண்டுகள் காத்திருக்கவேண்டியிருந்தது.

❖ அவள் 90 வயதை அடைந்தபோது அவள் ஒரு உற்பவகாலத்திட்டத்தில் (அடுத்த ஆண்டில்) ஒரு குமாரனைப் பெறுவாள் என்று அறிவித்தவுடன் அவள் நகைத்தாள்.

☐ சிலநேரங்களில் அவளுடைய விசுவாசம் உற்சாக மூட்டி நம்பச்செய்தது மற்ற நேரங்களில் தைரியத்தை இழக்கச் செய்தது.

❖ ஆபிராம் ஈசாக்கை பலியிடக்கொண்டு சென்ற போது அவளும் தன் விசுவாசத்தில் நம்மைப்போல் ஒரு மனுஷியே!

❖ அவள் தவறு செய்த (பாவம்) போதிலும் விசுவாசத்தில் நிலைத்திருந்தாளா?

❖ எபிரெய புத்தகத்தில் விசுவாசிகளின் பட்டியலில் அவளுடைய பெயரைக் காண்கிறோம்.



பண்ணப்படுவதால் ஞானம் வீழ்ந்துவிட்டது என்பதல்ல. "ஞானமுள்ள ஒரு ஏழை மனிதன் இருந்தான்; அவன் தன் ஞானத்தினாலே அந்தப் பட்டணத்தை விடுவித்தான்; ஆனாலும் அந்த ஏழை மனிதனை ஒருவரும் நினைக்கவில்லை. ஆகையால் ஏழையின் ஞானம் அசட்டைபண்ணப்பட்டு, அவன் வார்த்தைகள் கேட்கப்படாமற்போனாலும், பெலத்தைப்பார்க்கிலும் ஞானமே உத்தமம் என்றேன்" என்கிறார் பிரசங்கி (பிர.9:15,16). உங்களுடைய ஞானம் ஒருவேளை அசட்டை பண்ணப்பட்டிருக்கலாம் அதினாலே நீங்கள் சோர்ந்துபோகாதிருங்கள். ஞானமே பிரதானம் என காண்கிறோம்.

செத்த ஈக்கள் மத்தியில் உயிருள்ள ஈக்கள் இருப்பதைப்போல கர்த்தருடைய சபையில் செத்தவர்கள்மத்தியில் உயிருள்ளவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கர்த்தருடையவர்கள் ஜீவனுடையவர்கள் என்றே சொல்லவேண்டும். அப்போஸ்தலனாகிய பவுலுக்கு எத்தனையோ பாடுகள் பிரச்சனைகள் வந்தது. அத்தனை பாடுகளிலும் பிரச்சனைகளிலும் அவன் சோர்ந்துபோகாமல் கர்த்தருடைய நாமத்தை பறைசாற்றிக்கொண்டு வந்தான். ஒரு முறை "அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள் வந்து, ஜனங்களுக்குப் போதனைசெய்து, பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப்போனானென்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக்கொண்டுபோனார்கள். சீஷர்கள் அவனைச் சூழ்ந்துநிற்கையில், அவன் எழுந்து, பட்டணத்திற்குள் பிரவேசித்தான். மறுநாளில் பர்னபாவுடனேகூடத் தெர்பைக்குப் புறப்பட்டுப்போனான்" என காண்கிறோம் (அப்.14:19,20). பவுலுக்கு வந்த பிரச்சனை நமக்கு வந்தால் எத்தனைபேர் கிறிஸ்தவத்தில் நிலைத்திருப்போம்? சில சிறு பாடுகள் வந்தவுடன் சோர்ந்துபோய் பின்வாங்கிப்போகிறார்கள். பவுல் மரித்துப்போனான் என்று எண்ணினார்கள். அந்த அளவு அவன் மீது கல் வீசப்பட்டிருக்கிறது. ஆனால் அவனை கர்த்தர் பெலப்படுத்தினார். சுவிசேஷத்தின் மீதுள்ள தாகத்தினாலும், அவனுடைய வாஞ்சையினாலும் அவர்கள் அடித்த கல் அவனுக்கு ஒன்றும் பெரியதாக தெரியவில்லை. ஆண்டவருடைய அன்பு அவனை நெருக்கி ஏவினதினால். பர்னபாவுடன் தெர்பைக்கு சென்று ஊழியம் செய்தான். இன்றைக்கு ஒவ்வொரு ஊழியக்காரர்களும் பவுலை மாதிரியாக கொள்வார்களேயானால் ஒருநாளும் சோர்ந்துபோகார்கள்.

"நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்; துன்மார்க்கரோ தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள்" (நீதி.24:16). பவுல் ஒரு நீதிமானாக இருந்தபடியால் அவன் திரும்பவும் எழுந்து ஊழியம் செய்தான். மாம்சத்தில் இருக்கும்வரை ஒவ்வொருவருக்கும் பெலவீனம் சோர்வுகள் வரும். ஆனாலும் கர்த்தருடையவர்கள் அதாவது இயேசுவின் இரத்தத்தினால் நீதிமான்களாக்கப்பட்டவர்கள் ஏழுதரம் விழுந்தாலும் அவருடைய அன்பை நினைத்து மீண்டும் மீண்டும் எழுந்து கர்த்தருக்கு சாட்சியாக நிலைப்பார்கள். நீங்கள் எந்நிலைமையில் இருக்கிறீர்கள்? இந்த உலகத்தில் நீங்கள் வாழும் வாழ்க்கைதான் உங்களுக்கு சாட்சியாக பரலோகத்தில் தேவனுடைய நியாயத்தீர்ப்பில் வந்து சாட்சிசொல்லப்போகிறது. இதில் சாக்குபோக்கு சொல்ல இடமில்லை. ஆகையால் ஒவ்வொரு நாளும் ஜீவனுள்ளவர்களாக இருக்க பிரயாசப்படுங்கள். மரித்துப்போன எலிசாவின் கல்லறையில் போட்ட பிரேதம் உயிரடைந்தது (2இரா.13:21). அநேகருடைய கல்லறையில் புல்லுகள் கூட முளைப்பதில்லை. ஆக, இந்த எலிசா தேவனுடைய மனுஷனாக எந்த அளவு தேவனுடைய சித்தத்தை

நிறைவேற்றுகிறவனாக வாழ்ந்திருந்தால். அவனுடைய கல்லறையில் போட்ட பிரேதம் எழுந்திருக்கும் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "இந்த வார்த்தை உண்மையுள்ளது; என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்" என்கிறார் (2தீமோ.2:11). அவரோடேகூட உயிரோடு எழுப்பப்பட விரும்புகிற ஒருவர் முதலாவது அவரோடு கூட மரிக்கவேண்டும் அப்பொழுது தான் அவரோடேகூட பிழைக்கும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும். அவருக்காக ஒரு நஷ்டத்தைக்கூட அநுபவிக்காத ஒருவர், அவருக்காக கடுகளவு இரத்தம் சிந்தாத ஒருவர் எப்படி அவரோடு எழுந்திருக்க முடியும். அன்பானவர்களே, அப்போஸ்தலர்களும் முதல் நூற்றாண்டு கர்த்தருடைய சீஷர்களும் அவருடைய நாமத்திற்காக அநேக பாடுகளை அநுபவித்தனர். இன்று நீங்கள் கர்த்தருக்காக பட்ட பாடுகள் என்னவென்பதை எண்ணிப்பாருங்கள். நாம் அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; என்று நம்மை பவுல் உற்சாகப்படுத்துகிறார். பாடுகள் இல்லையென்றால் அது கிறிஸ்தவ வாழ்க்கையில்லை என்றே சொல்ல வேண்டும்.

வெளிப்படுத்தின விசேஷபுத்தகத்தை எழுதின யோவான் சொல்லும்போது; "அன்றியும் நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது இயேசுவைப் பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம்பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொருபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள். மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல். முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்" (வெளி.21:4-6). இப்படிப்பட்ட பாக்கியத்தை இப்பூமியில் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானத்திலே அவரோடுகூட அடக்கம் செய்யப்பட்டு பின்பு அவரோடுகூட உயிர்ப்பிக்கப்பட்டு, சாட்சியுள்ளவர்களாக இருக்கிறவர்கள் அவரோடுகூட அவருடைய ராஜ்யத்தில் வாழுகிறார்கள். இவர்களுக்கு இரண்டாம் மரணம் இல்லை.

**உயிரோடிருந்து கர்த்தரை விசுவாசிக்கிறவன் என்றென்றைக்கும் மரியாமல் இருப்பானா?**

ஆம், "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும், என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (யோவா.11:25,26). அவரை விசுவாசிக்கிற ஒவ்வொருவரும் மரித்தாலும் எழுப்பப்படுவார்கள். ஆகையால் கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்று காண்கிறோம். அவர் ஒருவரே உயிர்த்தெழுதலில் முதலாவதாக இருப்பவர். அவரை எழுப்பின கர்த்தர் அவரோடு நம்மையும்




பெண்கள் பகுதி

## சாராள், ஜாதிகளின் தாய் - Sarah, Mother of Nations

-Paula Bates

**- சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**



அவள் விசுவாசத்துடன் இருந்த போதிலும்கூட தன் வாழ்க்கையில் இவ்வேளையில் அவள் அதைரியமுள்ளவளாகி காரியங்களை ஒழுங்குபடுத்தவேண்டும் அப்போது தான் ஆபிரகாம் ஒரு குமாரனைப் பெறுவான் என நினைத்தாள்.

1 அவள் எகிப்து தேசத்தாளாகிய தன் அடிமைப்பெண்ணாகிய ஆகார் என்றவளை ஆபிரகாமுக்குக் கொடுத்தாள்.

☐ இதன் முடிவு என்னவாகயிருந்திருக்கும், ஆபிரகாம் இதற்கு மறுப்பு தெரிவித்தானா?

☐ நாம் பேசும்போது ஒரு சில தீர்மானங்கள் உருவாக்கப்படும் பொழுது - ஒருவேளை நம்மில் ஒரு உறுதியாக இருக்கலாம் அத்துடன் நாம் காரியங்களை வேறு கோணங்களில் பார்க்கும்போது பின் நாம் சிறப்பான தீர்மானம் ஒன்றை உருவாக்கலாம்.

2. ஆகார் கர்ப்பந்தரித்தபோது அவள் சாராளை அற்பமாக எண்ணினாள் (இப்போது ஆபிரகாம் தன்னுடைய புருஷன் என்ற எண்ணம் அநேகமாக ஏற்பட்டிருக்கும்)

3. ஆபிரகாம் ஆகாரிடத்தில் சாராள் செய்யும்படி விரும்பியதை செய்ய அனுமதித்து அவளை தன்னுடைய இடத்தைவிட்டு அனுப்பிவிட்டான். சாராள் இரக்கமற்றவளாய் இருந்தாள் ஆனால் பலதாரதிருமணத்தில் இது பொதுவானது மேலும் விபச்சாரம் அங்கே எப்போதும் வெறுக்கப்பட்டது - ஆனால் கர்த்தர் ஆகாரை காப்பாற்றினார்.

4. நாம் நமது திட்டங்களைக் குறித்து கவனமுள்ளவர்களாயிருந்து அவைகள் தெய்வீகத் திட்டங்களாக உள்ளனவா என உறுதி செய்து கொள்ளவேண்டும்.

5. இன்றும் கூட இந்தப்பிறப்பின் விளைவினைக்கூட நாம் காண்கின்றோம் ஏனென்றால் அரபு தேசத்தவர்கள்...

6. கர்த்தருடைய வேளை நம்முடையவையல்ல.... இதைப்பற்றி நினைக்கையில் அவர்கள் உண்மையிலேயே அப்போது கானான் தேசத்தவர்களா? கிட்டத்தட்ட 500 ஆண்டுகளுக்குப் பிறகே.

ஆதியாகமம் 17- கர்த்தர் இரு வசனங்களில் அவர் அவனை (ஆபிரகாமை) மிகவும் பலுகிப் பெருகப்பண்ணுவேன் என்று வாக்குப்பண்ணுகிறார். ஆபிரகாம் கர்த்தரிடம் அது ஆகாரின் குமாரனாக இருக்குமா? என்று கேட்டான். கர்த்தர் இல்லை அவன் சாராளின் மூலம் உண்டாவான் என்று சொல்லுகிறார்.

வசனம் 17- ஆபிரகாம் நகைத்து 100 வயதான தனக்கு பிள்ளை பிறக்குமோ? தொன்னூறு வயதான சாராள் பிள்ளை பெறுவாளோ? ஒரு பிள்ளையை கர்ப்பந்தரிப்பது கூடாதகாரியம் என்றான். ஆதியாகமம் 18 - சாராள் மூன்று புருஷர் (கர்த்தருடைய பிரதிநிதிகள்) அவர்கள் ஒரு குமாரனைப் பெறப்போகிறார்கள் என்று ஆபிரகாமிடம் சொன்னபோது நகைத்தாள் - வாக்குத்தத்தம் செய்யப்பட்டபோதிலும் அவர்களுடைய அந்தப் போக்கினால் (தவறினால்) 25 ஆண்டுகள் கழிந்தது.

☐ அவள் ஆபிரகாமோடு அவனுக்கு உதவியாக பொதுவான அதே கூடாரத்தில் வசித்து வந்தாள்.

☐ அவள் சிறந்த உபசரிப்பாளி

☐ வசனம் 10 கூடாரத்திற்குள் இருக்கவேண்டியவளாயிருந்தபோதிலும் கூடாரவாசலில் இதனைக் கேட்டுக்கொண்டிருந்தாள். ஸ்திரீகளாகிய நமக்குள் இருக்கிறதைப் போலவே அவள் அந்த மூன்று புருஷர்களின் சம்பாசனையில் மிகவும் ஆர்வமுள்ளவளாயிருந்தாள்.

வாலிபனே முழங்கிடு!
நான் ஒரு கிறிஸ்தவன் என்று.
வாலிபனே முழங்கிடு!
இயேசுவே கிறிஸ்து என்று.
வாலிபனே முழங்கிடு!
பொல்லாங்கனை ஜெயித்தேன் என்று.
வாலிபனே முழங்கிடு!
நான் கிறிஸ்துவுக்கு நல்ல போர்சேவகன் என்று.
வாலிபனே முழங்கிடு!
ஒரே சரீரம் அது கிறிஸ்துவின் சபையார் என்று.

P.டேவிட்

youth MINISTRIES

Romans 16:16

## வாசகர் கடிதம்



இந்த பத்திரிக்கை ஏப்ரல், மே இருமாதமாக வருகிறது. வந்ததும் ஒரு எழுத்து விடாமல் வாசித்து முடித்து விட்டேன். கேள்விக்கும் பதில் எழுதி விட்டேன். தொடர்ந்து அனுப்பிவையுங்கள். கூடுமானால் டிசம்பருக்குள் 100 முகவரி அனுப்பிவிடுவேன் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

**இப்படிக்கு,**
**Miss.S.Rajammal**
**Manonmany**
**Sivakasi**

100 பேர் முகவரிகளை கஷ்டப்பட்டு சேர்த்து கூடிய விரைவில் அனுப்புகிறேன்.

**இப்படிக்கு,**
**Mrs.J.Jayamani**
**Rajammal**
**Cudalore**

**ஐயா,**

தங்கள் புத்தகம் ரெட்டியார்பட்டி சகோதரி R. அனிதாநெகேமியா மூலம் வினாபகுதி ஜெராக்ஸ் பெற்றேன். பதில் எழுதுகிறேன். எனக்கு கிடைக்கும் புத்தகங்களில் இருந்து 7 ஜெராக்ஸ் எடுத்து பலருக்குக் கொடுக்கிறேன்.

**இப்படிக்கு,**
**J.Victor**
**Suvisesha Muthu**
**Tuticorin**


தேவ செய்திகள் அடங்கிய CD & DVD எங்களிடம் உள்ளது ரூ.100/- அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள் உங்கள் முகவரி மற்றும் மொபைல் எண்ணை SMS பண்ணவும். 9443558041







எழுப்புவார். இந்த நம்பிக்கை உங்களில் இருக்குமானால் நீங்கள் கர்த்தருடைய நாளில் உயிர்ப்பிக்கப்படுவீர்கள். உயிரோடிருந்து ஆண்டவரை விசுவாசிக்கிறவர்களுக்கு இரண்டாம் மரணம் இல்லை. அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவோடு அவர் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதைப்போல இவர்களும் கர்த்தருடைய குடும்பத்தில் நித்திய நித்தியமாக என்றென்றும் நிலைத்திருப்பார்கள். இந்தவிதமான பாக்கியத்தை நீங்களும் பெற்றுக்கொள்ள இன்றே உங்களுடைய ஆவி ஆத்துமா சரீரத்தை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது என்றென்றும் கர்த்தரோடு ஜீவனுள்ளவர்களாயிருப்பீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.




*Contact: 94435 58041*

**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**


**ஜெபியுங்கள்**

- சென்ற மாத ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காக...
- தொடர்ந்து இலங்கை ஊழியம் சிறப்புடன் நடைபெற...
- செப்டம்பர் மாத குமுளி ஊழியங்களுக்காக...
- புதிய வாசகர்களுக்காக...
- மாவட்ட ஊழியங்களுக்காக...
- தொலைக்காட்சி நேயர்களுக்காக...

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய சுவிசேஷகர்கள் (வாலிபர்கள்) தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**

**இயேசு சொல்கிறார்:**

**"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"**
**யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041**

**தெரிந்து கொள்வோம்**

# உலகின் சிறிய ஆச்சரியங்கள்!

▶ உலகளவில் மிகச்சிறிய ஏரி - டெட் ஏரி. இது இஸ்ரேலில் யோர்தான் பள்ளத்தாக்கில் உள்ளது.

▶ உலகில் மிகச் சிறிய கிரகம் - ப்ளுட்டோ (பரப்பளவு 1.665ஓ10 7 ச.கி.மீட்டர்)

▶ உலகளவில் மிகச் சிறியபார்க் - மில் என்ட்ஸ் பார்க் (Mill Ends Park) பரப்பளவு 452 ச. அங்குலம். இது அமெரிக்க ஐக்கியநாட்டில், ஓரிகன் மாநிலத்தின் போர்ட் லேண்ட் என்னும் ஊரில் உள்ளது.

▶ உலகளவில் மிகச் சிறிய புத்தகம் - டீனி டெட் - ஃப்ரம் டர்னிப் டவுன் (Tenny Ted from Turnip Town) இதன் அளவு 0.07 மி.மீட்டர்) இது கனடாவில் வெளியிடப் பட்டு உள்ளது. மேலும் இது 2007-ம் ஆண்டு உலகில் அதிக அளவில் பிரசுரிக்கப்பட்ட புத்தகமாகும்.

▶ உலகளவில் மிகச் சிறிய பூனை - டிங்கர்டாய் (இதன் நீளம் 19 செ.மீட்டர் உயரம் 7 செ.மீட்டர்). இது ஹிமாலயன் பெர்ஸியன் (Himalayan Persion) என்ற வகையைச் சேர்ந்தது. ஆனால் இது தனது 6வது வயதில் 1997-ம் ஆண்டு நவம்பரில் இறந்துவிட்டது.

K.R.K.Ravi Asir, Associate Editor

# வழிநடத்துனர்கள் தேவை
## Leaders Needed

J.C.Choate



சபையில் இன்று நம்முடைய மிகப்பெரிய தேவை சபையை வழி நடத்துனர்கள் தான். சத்தியத்திற்காக உறுதியாக நிற்கிறவர்களும், வேதாகமம் போதிக்கிறவற்றை அறிந்து, உண்மையாக மனந்திரும்பிய மனிதர் நமக்குத் தேவை. உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் வேதாகமத்தைக் குறித்துப் பிரசங்கிக்கிற ஆர்வமுடைய உலகதரிசனம் கொண்ட மனிதர் நமக்குத் தேவை. பிரசங்கம் செய்து, அதன்படி கிரியை நடப்பிக்கும், மேலும் சகோதரசிநேகம் கொண்டுள்ள மனிதர் நமக்குத் தேவை. உறுதியான விசுவாசமும், மனிதருடைய ஆத்துமாக்களை நேசிக்கிறதும், கர்த்தருக்காகவும் அவருடைய வேலைக்காகவும் நேரம் ஒதுக்குகின்ற மனிதர் நமக்குத் தேவை. இப்பேர்பட்ட போதிய மனிதர்களால், சபை வளர்ந்து, உலகமுழுவதும் சுவிசேஷம் பரம்பும். இவர்களில்லாமல், நாம் ஸ்தம்பித்துவிடுவோம்.

ஸ்திரீகள் வித்தியாசமான பங்கினைப் பெற்றுள்ளனர், அவர்கள் தங்களுடைய சொந்தப் பகுதியில் சுவிசேஷப்பணியை மேற்கொள்ளவேண்டும். அவர்கள் பகிரங்கமாகக் குழந்தைகளுக்கும், பாலிய ஸ்திரீகளுக்கும் மற்ற ஸ்திரீகளுக்கும் போதிக்கலாம். அவர்கள் நல்ல மனைவிகளாகவும், தாய்மார்களாகவும், சபையில் புருஷர்களுக்கு உதவியாகவுமிருக்கலாம். அவர்கள் உபசரிக்கிறதன் மூலமும் பிரயாசப்பட்டு போதிப்பதன் மூலமும் உறவினர்களையும், அண்டைவீட்டார்களையும், நண்பர்களையும் ஆதாயப்படுத்தலாம். இப்பேர்பட்ட ஸ்திரீகளுடைய ஈடுபாடில்லாமல் சபை அதிகமாக ஒன்றும் செய்யப்போகிறதுமில்லை, மிக அதிமாக வளர்ச்சியடையப் போகிறதுமில்லை.

தேவன் நியமித்தபடி புருஷர் ஸ்திரீகள் இருவரும் செய்யும்படிக்கு தங்களுடைய சொந்த வேலையை உடையவர்களாயிருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும் என்பதே இன்றைய உலகத்தின் சவாலாயிருக்கிறது. ஒருவர் இன்னொருவருடைய பணியை செய்ய முயலும்போது, பிரச்சனைகள் நேரிடுகிறது. இதனால்தான் தேவன் தனித்தனியாக வேறுபட்ட தலைமைத்துவ பங்கினைக் கொடுத்தார். ஒவ்வொருவரும் மற்றொருவரை மதித்து தேவன் அவர்களுக்கென்று கொடுத்த பணியினை அவர்கள் செய்கிறபோது, அங்கே இன்னமும் வளர்ச்சி ஏற்படுகிறது. இல்லையென்றால் அங்கே போட்டியும் தோல்வியும் ஏற்படுகிறது.

சபை இன்று வழிநடத்துனர்களின் பெரிய தேவையிலிருக்கிறது. மூப்பர்கள், உதவிக்காரர்கள், பிரசங்கியார்கள் மற்றும் போதகர்கள் போன்ற வழிநடத்துனர்கள் இல்லாமல் சபை வளர்ச்சியடையாது சமயம் கிடைக்காதவர் அல்லது வழிநடத்துவதற்கு சமயத்தை ஏற்படுத்திக் கொள்ளாதவர் என மிக



# நாளை மீண்டும் முயலுவேன் இவ்வுலகை மேற்கொள்ள
## Tomorrow I'll Grapple again with the world

நாளை மீண்டும் முயலுவேன்
இவ்வுலகை மேற்கொள்ள
தவறு என்ற காரியங்களோடே
மற்றும் ஒருபோதும் சரியில்லாதவற்றோடே;
நாளை மீண்டும் முயலுவேன்
இவ்வுலகை மேற்கொள்ள,
அன்பின் தேவனே, இன்றிரவு நான் ஓய்வெடுக்கட்டும்.

நான் இந்த நல்வேளையை,
அநுபவிக்கட்டும்,
இந்த மலைகளையும், வானங்களையும்
நீரோடைகளையும்,
நீண்ட, நெடுநாளின் துதிகீதங்களை கவனிப்பேன் நான்
மற்றும் இன்னொரு உலகக் கனவுகளில் விழித்திருப்பேன்;
இறுக அணைத்துக்கொள்வேன் இந்நிமிடங்களை எனக்காக

-ஒவ்வொன்றாக எண்ணுவேன் அவைகளை-
பொக்கிஷமாக வைப்பேன்
அன்பு இருதயங்களின் மனமார்ந்த அன்பினை
வெது வெதுப்பான அஸ்தமிக்கும் சூரியனோடே;
நான் விண்மீன்களை சென்றடைவேன்
மாலை மயங்கும் ஆகாயத்துனுள்
அவைகளை மென்மேலும் இழுத்துகொள்வேன்
என் ஆன்மாவினுள்
வருங்காலத்தைப் பற்றியிருக்கும் எந்த
மந்தாரத்தையும் பிரகாசிப்பிக்க.

நாளை மீண்டும் முயலுவேன்
இவ்வுலகை மேற்கொள்ள,
தவறு என்ற காரியங்களோடே
மற்றும் ஒருபோதும் சரியில்லாதவற்றோடே-
நாளை மீண்டும் முயலுவேன்
இவ்வுலகை மேற்கொள்ள,
அன்பின் தேவனே, இன்றிரவு நான் ஓய்வெடுக்கட்டும்.

*-Betty Burton choate*

பெண்கள் பகுதி

## மனைவி - Wife

J.Glory Arjunan




அன்பான சகோதரிகளே, தேவன் ஏற்படுத்திய முதல் குடும்பத்தில் ஆதாமுக்கு ஏற்றதுணையாக உருவாக்கப்பட்டவள் ஏவாள். மனைவி என்ற அந்தஸ்தைப் பெற்ற முதல் பெண்ணாகிய ஆதாமின் மனைவி. ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டாள் (ஆதி.22:20). மனைவி என்ற அந்தஸ்தைப் பெற்றவள் எப்படியிருக்க வேண்டுமென்பதை வேதாகமத்தின் உதவியுடன் பார்க்கலாம்.

▶▶ ஏற்றதுணையாகயிருக்கவேண்டும். ஏனெனில் கர்த்தர் ஏற்றதுணையை அவனுக்கு (ஆதாமுக்கு) உண்டாக்குவேன் என்றார் (ஆதி.2:18). தேவனால் உண்டாக்கப்பட்ட ஒரு அழகான கிரியை இவள். ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள் என அழைக்கப்பட்டாள் (ஆதி.3:20).

▶▶ ஏற்றதுணையாகயிருந்தாளா? இல்லை. தான் கீழ்ப்படியாமல் போனதுமில்லாமல் தன் புருஷனையும் விழச்செய்தாள். தேவனுடைய கட்டளையை மீறி பாவஞ்செய்யத் துணிந்தாள். காரணம் என்ன? இச்சை தான். ஸ்திரீகள் இச்சைகளினால் இழுக்கப்பட்டுப் போவார்கள் என்பதை பிசாசு நன்கு அறிந்தவனாயிருக்கிறான். "அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் (தேவன் விலக்கியது) புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான்" (ஆதி.3:6). பூமி சபிக்கப்படகாரணமானாள் (ஆதி.3:17). அதைப்போல லோத்தின் மனைவி சாபத்திற்குள்ளானாள் (ஆதி.19:26).

▶▶ மனைவியானவள் கீழ்ப்படிதலுள்ளவளாக இருக்கவேண்டுமென்பது தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப்புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்" என்று எபே.5:23; 1பேது.3:10-ல் வாசிக்கிறோம். "அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்..."(1பேது.3:6). இவ்வாறு நடக்கவேண்டியது மனைவியானவளுக்கு மிக மிக அவசியம். அப்பொழுது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாத புருஷர்களிருந்தால், பயபக்தியோடுகூடிய மனைவியின் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து போதனையின்றி, மனைவியின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள். குடும்பங்கள் சுபிட்ஷமாக வாழும்.

▶▶ மனைவிக்குத் தலையாயிருப்பவர் யார்? புருஷன். ஆம், புருஷருடைய இவ்வதிகாரத்தை மனைவிமார்கள் தங்கள் கைகளில் எடுத்துக்கொள்கிறார்கள். அதனால் இன்றைய நாட்களில் பிரச்சனைகளும், பிரிவினைகளும் வருகிறது. பவுல் தீமோத்தேயுக்கு எழுதும்போது; "உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ்செலுததவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை..." என்றெழுதுகிறார் (1தீமோ.2:12). ஏனெனில் ஆதாம் (புருஷன்) முதலாவது உண்டாக்கப்பட்டான். நாம் நம்முடைய குடும்பத்தில் எவ்வாறு இருக்கிறோம்? யோபுவின் மனைவி யோபுக்கு உபதேசம்பண்ணி தேவனை துஷித்து ஜீவனை விடு என்றாளே, அவ்விதமாக இருக்கிறாயா? (யோபு 2:9-10). தேவனிடத்தில் எத்தனை எத்தனையோ நன்மைகளை பெற்ற நாம் கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரத்தை செலுத்துவோம். மனமகிழ்ச்சியாய் வாழுவோம்.

மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதை கண்டடைகிறான். கர்த்தரால் தயையும் பெற்றக்கொள்கிறான் (நீதி.18:22). ரோம.16:3-ல் ஆக்கில்லாவோடு இணைந்து ஏற்ற துணையாக செயல்பட்ட பிரிஸ்கில்லாளைப்போல செயல்படுங்கள். ஒருவரையொருவர் வாழ்த்துங்கள். தேவசித்தம் செய்து தேவ ஆசீர்வாதம் பெறுவோமாக!



அதிகமானோரை நாம் கொண்டிருக்கிறோம். நாம் கர்த்தருடைய வார்த்தையை அறியாதவர்கள் மற்றும் சபையின் ஊழியத்தை அறியாதவர்கள் என மிக அதிகமானோரை கொண்டிருக்கிறோம். நிச்சயமாக, உண்மையான வழிநடத்துகிறவர்களின் ஊழியம் கூடுமிடத்தைக் கொடுப்பதிலும் திறந்த வாசல்களை ஏற்படுத்துவதிலும் அதிகமாயிருக்கிறது. சபையை வழிநடத்துகிறவர்கள் அடிக்கடி செய்வது போல, விளையாட்டு பந்தயம், வியாபாரம், அரசியல் போன்றவற்றில் பொறுப்பாளிகளாயிருப்பவர்கள் தங்களுடைய பணியை செய்வார்களானால், அவர்கள் முழுவதும் தோற்றுப்போவார்கள். திட்டமிடாத இலக்குகளை நிர்ணயிக்காத, அர்த்தமில்லாத வேலைகள் இருக்கின்ற இடத்தில், செய்து நிறைவேற்றமுடியும்?

நம்முடைய தோல்விகளுக்கு நாம் மன்னிப்புக்குமேல் மன்னிப்பு அளிக்கின்ற இடத்தையே நாம் வந்தடைந்திருக்கிறோம். நாம் ஜனங்கள் ஆர்வமில்லாதவர்கள் என்றும் மதஉலகம் கவனிக்காது என்றும், ரேடியோ பிரசங்கத்தினால் பணமும், நேரமும் வீணாகிறது என்றும், ஜனங்கள் வாசிக்கமாட்டார்கள் என்றும், ஆனபடியால் நாங்கள் வெறுமனே உட்கார்ந்து மரிக்க தயாராக இருக்கிறோம் என்றும் நாமாகவே சொல்லிக்கொள்கிறோம். இது வழிநடத்துதலா? இது வழிநடத்துதலாகாது. கர்த்தருடைய ஜனங்கள்தாமே இவ்வாறு நடந்து கொள்வது சரியான வழியல்ல.

உண்மையாக வழிநடத்துகிறவ ஒருவன் தன் ஊழியத்தை விட்டுவிட்டு வெளியேற மாட்டான். ஊழியத்தின் ஒரு நல்ல கனியைத்தராவிட்டால், அவன் இன்னொரு வழியில் முயலுவான். அவன் தேடுவதிலும், ஜெபிப்பதிலும், ஊழியஞ்செய்வதிலும் ஊழியம் நிறைவேற்றப்படும்படி இன்னொன்றை கண்டு கொள்ளும்வரை தொடர்ந்து செயல்படுவான். அவன், "மனுஷரால் இது கூடாததுதான், தேவனால் இது கூடாததல்ல; தேவனாலே எல்லாம் கூடும்...." (மாற்.10:27) என்ற இயேசுவின் வார்த்தைகளை நினைவுகூருவான்.

கவனியுங்கள்! உலகம் பாவத்தில் கிடக்கிறது. நாம் கிறிஸ்துவின் சுவிசேஷம் தேவனுடைய கிருபை மற்றும் இரக்கமாகிய - சுகமாக்கும் மருந்தினை கொண்டிருக்கிறோம். இந்த மருந்து போதுமான ஜனங்களை சென்றடைந்து பாவிகளின் பெரிதான தேவை அறிவுறுத்தப்பட்டு, சரியான வழியில் கொடுக்கப்பட்டால், அங்கே பதில் கிடைக்கும். இல்லை, நாம் சத்தியத்தை விட்டுக் கொடுக்கவோ, தவறை போதிக்கவோ, கிருபையை மட்டும் பிரசங்கிக்கவோ அல்லது சுவிசேஷத்தை சர்க்கரை தடவிக்கொடுப்பதற்கு ஓராயிரம் காரியங்களைச் செய்யவோ வேண்டியதில்லை. நாம் கர்த்தருடைய நாமத்தை மறுதலிக்கவோ, பிரிவினை சபைகளில் இணையவோ அல்லது சமூக சபைகளை ஸ்தாபிக்கவோ வேண்டியதில்லை. சத்தியத்தை தனிப்பட்ட நம்பிக்கையோடு பிரசங்கித்து நாம் போதிக்கிறவர்களை நேசிப்பதே நாம் செய்யவேண்டியவைகள் ஆகும்.

இயேசு நாம் உலகமுழுவதும் சென்று சகல சிருஷ்டிகளுக்கும்

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டுமென சொன்னார் (மாற்.16:15,16). அவர் அதைச் சொன்னாரா அல்லது இல்லையா? அவர் அதைச் சொன்னாரென்றால் அவர் சொன்னபடி நாம் செய்யவேண்டியவற்றை கட்டாயமாக செய்து கொண்டிருக்கிறோமா? நாம் செய்யாவிட்டால், நாம் அவருக்குக் கீழ்ப்படிந்து கொண்டிருக்கிறோமா? நாம் அவருக்குக் கீழ்ப்படியவில்லையென்றால், நாம் ஆவிக்குரிய வழிநடத்துபவர்கள் என்று நம்மால் எவ்வாறு சொல்ல முடியும்?

வழிநடத்துனர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் வழிநடத்துவார்கள், சுவிசேஷப்பணியின் முழு இலக்கின் மேல் தங்கள் கண்களைப் பதித்தவர்களாயிருப்பார்கள், அப்போது தான் சபை கர்த்தருடைய கட்டளைகளை நிறைவேற்றமுடியும். இதைச் செய்கின்ற போதுமான வழிநடத்துனர்கள் இருக்கையில், உலகம் வேதாகம அறிவைப் பெற்றிருக்கும். நாம் ஒப்படைக்கப்படாவிட்டால், கர்த்தர் நாம் செய்யும்படிக்கு நம்மை அவர் தகுதிப்படுத்தமாட்டார் ஏதோ சிலவற்றைச் செய்யும்படி நம்மைக் கேட்கிறவருமல்ல.

வழிநடத்துனர்களாயிருப்பதற்கு, நாம் ஏராளமான பணம் வைத்திருக்கவோ, நாம் பெரிய பிராந்திய சபைகளைக் கொண்டிருக்கவோ அல்லது கல்வியில் உயர்ந்த பட்டங்களைப் பெற்றிருக்கவோ தேவையில்லை. நம்முடைய தேவையெல்லாம் கர்த்தர், சத்தியம், விசுவாசம், அன்பு, ஆர்வம், தரிசனம், ஞானம், மற்றும் இலக்கிற்கான முழு ஒப்புக்கொடுத்தல் போன்றவைகளே ஆகும்.

கர்த்தர் செய்யும்படிக்கு நம்மை கேட்டுக் கொண்டிருக்கிற ஊழியத்தை நாம் செய்ய அவர் எல்லாவித ஏதுக்களையும் நமக்குத் தந்தருளியிருக்கிறார். நாம் பிராந்திய சபைகள் ரேடியோ, டி,வி மற்றும் இலக்கியம் போன்ற வசதிவாய்ப்புகளைக் கொண்டிருக்கிறோம். தேவசெய்தியை வெளிக்கொணருவதற்கு ஏதுவான இன்டர்நெட், ஒலிநாடாக்கள், வீடியோக்கள், DVD க்கள் மேலும் அளவில்லா மற்ற ஊடகங்கள் அனைத்தும் நமக்கு உதவியாக இருக்கின்றன. நாம் சுவிசேஷக் கூட்டங்களை ஒன்று அல்லது 3 நாட்களுக்கும் மேலாக நீண்ட நேரமும் அதிக பயனளிக்கும் வகையில் வீட்டிலும், பெரிய நகரங்களில் முகாம்களையும், மருத்துவனைகளிலும் மருத்துவ கிளினிக்குகளிலும், வியாபார ஸ்தலங்களிலும் வாகன ஓட்டுனருக்குகென்று அமைக்கப்பட்ட சாலை ஓரங்களிலும், உணவகங்களிலும் இலக்கிய நூலை வைத்தும், ஜனங்கூட்டங்களை சென்றடையும்படிக்கு வேதாகம தபால்வழி பாடத்தினை பயன்படுத்தியும், நகரங்களிலும் சமுதாயத்திலும், பிரச்சாரம் செய்து நம்மோடு தனிப்பட்டவிதத்தில் வேதத்தைக் கற்று நம்முடைய கூட்டங்களில் பங்குபெற ஜனங்களை நாம் உற்சாகப்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

நாம் இந்தப் பணியைச் செய்ய நாம் இவ்வாறு செல்கையில், எதிர்ப்புகளையும், உபத்திரவத்தையும் கூட நாம் சந்திப்போம், ஏனென்றால் பிசாசு போரிடுவான், ஆனால் இந்த எதிர்ப்புகூட முன்பு எப்போதுமில்லாதவாறு சுவிசேஷம் பரவுவதற்கு உதவியாயிருக்கும். இதே தான் முதல் நூற்றாண்டில் நடந்தேறியது,



ஆராதனைகளும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதற்கு எதிரிடையாக சுற்றிலுமிருந்த சகல ஜனங்களும் ஒவ்வொரு வகையான விக்கிரகத்தை வழிபட்டு மூட நம்பிக்கைகளில் மூழ்கிப்போயிருந்தார்கள். குறிப்பிட்ட காலத்தில் இரட்சகர் பிறக்க வேண்டுமென்பதற்காக சகல காரியங்களும் ஆயத்தம் பண்ணப்பட்டன.

இந்த எல்லாகாரியங்களும் சம்பவிக்கும் முன்பே, இவைகள் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன. அவைகள் தேவனுடைய வழி காட்டுதலின்படியே அவருடைய முன்னறிவுடனே, மனுஷர் மூலமாக அடிக்கடி தீர்க்கதரிசனமானது குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவர்கள் எழுதி கொண்டிருந்தது என்ன என்று உணராதிருந்தார்கள். அவர்களில் சிலர் ஆபூர்வமாக வாழ்ந்து தீர்க்கதரிசன நிறைவேற்றத்தைக் கண்டார்கள். ஒவ்வொரு சமயத்திலும் குறிப்பிடப்பட்ட நேரத்தில் விவரிக்கப்பட்ட விதமாக வாழ்க்கையில் மெய்யாகவே அந்த தீர்க்கதரிசனங்கள் வெளிப்படுத்தப்பட்டன, அவைகள் விவரிக்கப்பட்டபடியே நடந்தேறின அளவில்லாத அறிவு, அவருடைய புத்தகத்திலுள்ள முன்னறிவு நூற்றுக்கணக்கான நிரூபணங்களுக்கான விளக்கமாக மாத்திரம் இருக்கிறது.

வேதாகமம் இருப்பது தேவனுடைய வல்லமையானது அதனுடைய சத்துருக்களிடம் இருந்து நல்ல நிலைமையில் காப்பற்றவும், பாதுகாக்கவும் இருக்கிறது என்பதை காட்டுகிறது.

தேவன் தம்முடைய புஸ்தகத்தை எழுத அறிவுடையவராக இருந்தது மாத்திரமல்ல, அவர் அதை நிரூபிக்கவும் பலயுகங்களாக அதை பாதுகாக்கும் வல்லமையுடையவராகவும் இருந்தார். வேதாகமத்தின் பக்கங்களை எழுதுவதற்காக பயன்படுத்தப்பட்ட தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்ட மனுஷர்களால் பல அற்புதங்கள் செய்யப்பட்டன. இந்த எழுத்தாளர்கள் தேவனால் வழி நடத்தப்பட்டவர்கள் என்பதை நிரூபிப்பதற்காக இவைகள் செய்யப்பட்டன. இந்த அற்புதங்கள் நடைபெற்ற சமயத்தில் அவைகளில் எவையேனும் விவாதிக்கப்பட்டு வெற்றியடைந்ததில்லை. அவைகள் கண்கண்ட சாட்சிகளினால் உண்மையானவைகள் என ஏற்றுக் கொள்ளப்பட்டன. அவைகள் முயற்சி செய்த தேவனுடைய சத்துருக்களினாலும் பொய்யென்று நிரூபிக்கப்படவில்லை. அற்புதங்கள் நடந்த நாளில் சத்துருக்களினால் அதை பொய்யென்று நிரூபிக்க முடியவில்லை, இன்றைக்கு ஜனங்கள் அந்த அற்புதங்களை சந்தேகிக்கும் நிலைமையில் இல்லை. தேவனிடத்திலிருந்து பேசிய மனிதர்கள் உண்மையாகவே அவருடைய கருவிகளாய் இருந்தார்கள் என்று சவால் விடுத்த மனுஷருக்கு அவைகள் குறிப்பிடப்பட்ட நிரூபணங்களாய் நிற்கின்றன (மத்.10:38, யோவான் 20:30,31).


“அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார் ஆமென்” (மாற்கு 16:20).

தேவனுடைய புத்தகத்தின் எதிரிகள்

பேசப்பட்ட வார்த்தையும் எழுதப்பட்ட வார்த்தையும் உண்மையிலேயே தேவனிடத்திலிருந்துதான் வந்தன என்று நிரூபிப்பதற்கு அற்புதங்கள் வல்லமையுடையவைகளாய் இருந்த போதிலும் அவைகள் போதுமானதாக இருக்கவில்லை. தேவனுடைய புத்தகத்தை அழிக்கும் வீணான முயற்சிகளில் தங்களுடைய ஜீவியங்களை அநேகமான சத்துருக்கள் செலவழித்து இருந்திருக்கிறார்கள்.

விசுவாசமில்லாத விஞ்ஞானிகள் தேவனுடைய புத்தகத்தின் மேல் பரியாசங்களை குவிக்க முயற்சி செய்திருக்கிறார்கள். தேவனுடைய புத்தகத்தின் பக்கங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற மெய்யான விஞ்ஞானத்துக்கு எதிராக இந்த விஞ்ஞானிகளுடைய கொள்கைகள் தாமே பொய்யென்று வெளியரங்கமாகி இருக்கின்றன.

# எது தேவனுடைய புத்தகம்?
## Which Is God`s Book?
*-Betty*



பெண்கள் பகுதி

**– சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**




**எகிப்து தேசத்தை தேவன் பின்வருமாறு சொல்லி சபித்தார்.**

“எகிப்தியரின் சிறையிருப்பைத் திருப்பி, அவர்களை அவர்களுடைய ஜநந தேசமாகிய பத்ரோஸ் தேசத்திலே திரும்பிவரப் பண்ணுவேன்; அங்கே அவர்கள் அற்ப ராஜ்யமாயிருப்பார்கள். அது இனி ஜாதிகளின்மேல் தன்னை உயர்த்தாமல், மற்ற ராஜ்யங்களிலும் அற்பமானதாயிருக்கும், அவர்கள் இனி ஜாதிகளை ஆளாதபடிக்கு அவர்களைக் குறுகிப்போகப்பண்ணுவேன்” (எசே.29:14,15).

இந்த சாபத்தின் காலம் தொடங்கி, எகிப்து தன்னுடைய அண்டை நாடுகளின் மத்தியில் ஒரு அற்ப தேசமாகத்தான் இருந்தது. அப்படிப்பட்ட ஒரு வல்லமையான தேசத்திற்கும் வரும் வீழ்ச்சியையும் அது தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக தாழ்மையான நிலையில் இருந்ததையும் அதை தாழ்த்தக்கூடிய வல்லமையையும், அதன் நிலையை முன்னறிந்து கொண்டவராகவும் தேவனைத் தவிர வேறொருவரும் போதுமான விளக்கம் அளிக்கவில்லை.

மாபெரும் உலக சம்பவங்களாகிய நான்கு உலக சாம்ராஜ்யங்களின் எழுச்சியை குறித்த முன்னுரைத்தலாகிய தீர்க்கதரிசனம் மற்றொரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. மிகவும் குறிப்பாக விளக்கப்பட்டுள்ள இந்த நான்கு சாம்ராஜ்யங்களையும் தற்செயலான எந்தவொரு வரலாற்று மாணவரும் தீர்க்கதரிசன பாடத்தை (தானி.2:7-48) வாசிக்கிற பொழுது உடனே அடையாளம் கண்டுகொள்ள முடியும். பாபிலோனிய சாம்ராஜ்யம் தொடங்கி (அந்த சமயத்தில் இருந்தது) அதற்கு பதிலாக மேதிய பெர்சிய சாம்ராஜ்யமும், அதன் பின் கிரேக்க சாம்ராஜ்யமும் (தானி.8:20,21 வசனங்களில் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது) இறுதியாக ரோம சாம்ராஜ்யமும் - அதை தொடர்ந்து வருகிறது (தானி.2:44). இந்த தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டும், உரைக்கப்பட்ட காலத்திலிருந்து அறுநூறு ஆண்டுகளுக்கு மேலாக முழுமையாக நிறைவேறாமல் இருந்தன. தேவன் தவிர யார் ஒருவர் எதிர் கால சம்பவங்களை முன்னாக கண்டு அவைகளை மிகவும் தெளிவாக விளக்கியிருக்க முடியும்?

தேவன் முழு உலகத்தையும் குறித்த காரியங்களில் விருப்பமுடையவராக இருக்கிறார், அவர் வழிகாட்டிய அநேக காரியங்கள் சம்பவித்திருக்கின்றன என்பதை குறிப்பிடப்பட்டும், நிறைவேறியும் இருக்கிற அநேகமான தீர்க்கதரிசன சொற்றொடர்களால் நாம் உணர்ந்து கொள்ளமுடியும். ஆனால் அவர் தனிப்பட்ட மனுஷனை குறித்தும் அக்கறையுடையவராக இருக்கிறார் இந்த அக்கறையானது அநேகம் முறை வேதாகமத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**மனுஷனுடைய ஆத்துமா இரட்சிக்கப்படுவதற்கான வழியை தேவன் திட்டமிட்டார்**

முன்பே குறிப்பிட்டிருந்தபடி மனுஷனை அவனுடைய பாவத்திலிருந்து இரட்சிக்கும்படி ஒரு வழியை உண்டாக்கத்தக்கதாக உலகத் தோற்றத்துக்கு முன்னே ஒரு இரட்சகரை கொடுக்கத்தக்கதாக தேவன் திட்டமிட்டார். உலக சம்பவங்களின் முழு பாதையும், இந்த தீர்க்கமான கருத்தை சுற்றியே சுழன்று கொண்டிருக்கிறது.

ஒரு தேசம் எழும்பியது, அதன் மூலமாக தேவனுடைய போதனைகளும்,



நாம் செய்யும்படி தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற பணியை நோக்கி மாத்திரம் முன்னேறி சென்றால் இதே தான் இன்றும் நடந்தேறும்.

நாம் வெறுமனே உட்கார்ந்து கொண்டு, நம்முடைய ஊர் ஜனங்களுக்கும் உலகத்திற்கும் சத்தியத்தை எடுத்துச் செல்ல மறுக்கிறவர்களாயிருக்கும் போது, நாம் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ பாதுகாப்பிலிருந்து மனிதவர்க்கத்தைப் பிடுங்கிக் கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோம். அதன் விளைவாக, அவர்கள் இழந்து போனவர்களாகவும், நாம் பரிதாபகரமாக கர்த்தரை இழந்து விடுவதால் நம்முடைய சொந்த ஆத்துமாவும் ஆபத்தில் சிக்கிக் கொள்ளும்.

சகோதரரே, உலகம் மரிக்கிற வேளையில் சபை வளர்ச்சியற்று சோம்பலாய் இருக்கட்டும் என்றும், போதும் போதும் என்றும் இனிமேலும் வெறுமனே உட்காராதிருக்க தீர்மானிப்போமா? நம்முடைய ஆவிக்குரிய மந்த நிலையினால் பிறருடன் பேசி உண்மையை வெளிப்படுத்த பயந்து வெட்கப்பட்டுக் கொண்டிருப்பதற்கு மாறாக மத உலகில் நாம் எப்போது எழுந்து வழிநடத்தும் குரலாக இருக்கப் போகிறோம்? நமது கர்த்தர் யூதாவின் சிங்கம் என புகழப்பட்டவர் அல்லவா! நாம் அவருடையவர்களானால், நாம் துணிச்சலான இருதயங்களைக் கொண்டிருக்க வேண்டும்!

நீங்கள் ஒரு வழிநடத்துனரா? முழங்காலில் நின்று தேவன் உங்களுக்கு உதவும்படி கேளுங்கள், மேலும் உங்களுடைய உடன் வழி நடத்துனர்களும் கர்த்தர் உங்களுக்கு முன் வைத்த திறந்த வாசலைக் காணட்டும். அதன் பின் “அதன் உள்ளே செல்லுங்கள்”! தொடர்ந்து செல்லுங்கள்!

❒ இந்தியாவில் ஆப்பிள் நிறுவனம் நேரடியாக ஸ்டோர் அமைக்க முடிவு செய்துள்ளது.

❒ டெல்லி - வாரணாசிஇடையே புல்லட் ரயில் பணி ஜப்பான் நிதியுதவியுடன் இத்திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.


❒ அத்திக்கோம்பை கால்நடை கண்காட்சியில் நாட்டுப் பசு விலை ரூபாய் 1.25 லட்சம்.

**நடப்புச் செய்திகள்**

**நம்பிக்கை TV சேனலில்**
**ஒவ்வொரு வாரமும்**
**திங்கள் மற்றும்**
**சனிக்கிழமைகளில்**
**மாலை 7.30 மணி முதல்**
**‘தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்’**
**நிகழ்ச்சிகளைப் பாருங்கள்**
**9443558041**

‘ஒரே வழி’ வேதபாடம் **The Master Course**
படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50–ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate**
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

## பாடம் -20 பக்கத்திலிருந்த மிகவும் பிரசித்திபெற்ற கள்ளன்
## The Most Popular Thief in the Neighborhood
***- Jerry Bates***




**– சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

1. இயேசுவானவர் மரித்தபோது அங்கே மூன்று சிலுவைகள் இருந்தன. ஒரு எழுத்தாளர் அந்தக் காட்சியை பின்வருமாறு விவரிக்கின்றனர். மூன்ற சிலுவைகள் அந்த ஏப்ரல் மாதம் கொல்கொதாவின் உச்சியில் இருந்தன. ஒன்றின் மீது ஒரு கள்ளன் மரித்து தன்னை இழந்து போனான். மற்ற சிலுவையில் ஒருவன் பாவத்திற்காக மரித்து இரட்சிக்கப்பட்டான். இன்னுமொரு சிலுவையில் ஒரு ஆட்டுக்குட்டி பாவத்திற்காக மரித்து தேவனுடைய கு மா ரனாயிருந்தார்.

2. துவக்கத்தில் இரண்டு கள்ளர்களுமே இயேசுவின் மீது தூஷணமாய்பேசினர். ஆனால் சிலுவையில் இருந்த சற்று நேரத்தில் கள்ளர்களில் ஒருவனில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அப்படியாக, அவன் புகழ்பெற்ற தன் வார்த்தைகளைப் பேசினான். அதற்கு இயேசு இன்று நீ என்னுடனே பரதீசியிலிருப்பாய் என்று பதிலளித்தார்.

3. திருடர்கள் பொதுவாக பிரபலமாயிருப்பதில்லை. ஆனால் அந்தத் திருடன் பிரபலமாயிருந்தான். அவன் ஏறக்குறைய அதிகமாக இயேசு அறியப்பட்ட அளவுக்கு அறியப்பட்டான்.

அவனைப் பற்றி நம்மிடம் (தகவல்) ஒன்றுமில்லை. அவனுடைய பெயர்கூட இல்லை. சாதாரணமாகக் கள்ளர்கள் சிலுவையிலறையப்படுவதில்லை. அவன் சாதாரணத் திருடனில்லை. அநேகமாக ரோம அரசுக்கு எதிரான ஒரு புரட்சிக்காரனாக இருந்திருக்கக்கூடும்.

மரிக்கும் பொழுது அவன் சொன்ன மிகச் சுருக்கமான வார்த்தைகளுக்காக அவன் அறியப்பட்டிருக்கிறான். ஆண்டவரே உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது என்னை நினைத்தருளும் என்றான் (லூக்.23:42).

4. ஏன் இந்தக் கள்ளன் இவ்வளவு புகழ்பெற்றவனானான்?

இரட்சிப்பை போதிப்பதற்கு அவன் கர்த்தருடைய நாமத்தை வார்த்தைகளினாலே அறிக்கை செய்ததற்காக சொல்லப்படுகிறான்.

விசுவாசத்தினாலே மட்டுமே இரட்சிப்பு கிடைக்கும் என்று போதிக்க அவன் பயன்படுத்தப்படுகிறான். ஒருவர் பின்வருமாறு எழுதினார்.

“எப்பொழுது நீ இயேசுவை உன்னுடைய ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்கிறாயோ அப்பொழுதே பாவங்கள் மன்னிக்கப்படுகிறது, ஏற்றுக் கொள்ளப்படுகிறாய் நித்தியமாக பாதுகாப்பாயிருக்கிறாய்” மேலும் பரலோகத்திற்காக வைக்கப்பட்டிருக்கிறாய் என்று, ஞானஸ்நானம் பெறாமல் ஒருவர் இரட்சிக்கப்படவும் பாவமன்னிப்பைப் பெறவும் அவன் போதிக்கப்படுகிறான்.

சபையில் இல்லாமலே ஒருவருக்கு இரட்சிப்பு உண்டு என்று போதிக்க அவன் பயன்படுத்தப்படுகிறான்.

மரணப்படுக்கையிலுள்ள ஒருவர் மனந்திரும்ப முடியும் என்று போதிக்கப்பட அவன் பயன்படுத்தப்படுகிறான்.

5. சிலுவையிலிருந்த கள்ளனைப் பற்றி என்ன? என்று ஒருவர் கேட்பது அசாதாரணமானதல்ல.

6. புதிய ஏற்பாட்டிலே யாரும் அந்தக் கேள்வியைக் கேட்டதில்லை.

அந்தக் கள்ளன் இரட்சிக்கப்பட்டான் என்பதை நாம் ஒத்துக்கொள்ளுகிறோம். பரதீசு என்பது இரட்சிக்கப்பட்டவர்கள் நியாயத்தீர்ப்புக்காக காத்திருக்கும் பாதாள உலகத்தின் ஒரு பகுதி.



1. இன்றுள்ள இரட்சிப்பிற்கான (திட்டத்தை) மாத்திரம் போதிப்பதில்லை.

அவன் ஒரு எதிர் நாட்டுப் பாவியல்ல, தேவனுடைய உடன்படிக்கையின் மக்களில் ஒரு பகுதி. அவன் ஒரு யூதன். அவன் பழைய ஏற்பாட்டின் கீழான யூதனாக மரித்தான். புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவனாக அல்ல.

1. ரோமர்கள் ரோமக் குடிமக்களை சிலுவையிலறைந்தனரா? இல்லை.

2. கீழ்ப்படியாத பிரஜைகளை ரோமர்கள் சிலுவையிலறைந்தனர். பிரஜைகள் என்று அந்தப் பகுதியில் அழைக்கப்படுகிறவர்கள் யூதர்கள்.

3. அடுத்த கள்ளனுக்கு அவன் சொன்ன வார்த்தை நீ தேவனுக்கு கூட பயப்படுவதில்லையா இது அவனை யூதனென்று அடையாளம் காட்டுகிறது.

4. அவன் ஒருபோதும் ஞானஸ்நானம் பெறவில்லை என்று யூகிக்கப்படுகிறது. ஆனால் யோவான் ஸ்நானகன் அந்தப் பகுதியில் திரளான மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்திருந்தார். அவன் இயேசுவைப் பற்றியும், வரப்போகிற அவருடைய இராஜ்யத்தைப் பற்றியும் அதிகமாக அறிந்திருந்தான். இயேசு என்பவர் ஒரு முடிவல்ல, கிறிஸ்து நிச்சயமாக ஒரு இராஜ்யத்தை உடையவராயிருப்பார் என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. சீடர்கள் அவர்கள் நம்பிக்கை சிலுவையிலேயே செத்துப்போகிறதென்று எண்ணினார்கள். ஆகவே அவன் யோவானால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கக்கூடும்.

5. அவன் ஞானஸ்நானம் பண்ணப்பட்டானா இல்லையா என்பது முக்கியமல்ல. அவன் யார் வேண்டுமென்றாலும் இரட்சிக்கப்பட முடியும் என்பதற்கு அவர் மாதிரியாயிருந்தான்.

பழைய பிரமாணம் நீக்கப்படும் முன்னரே அவன் இரட்சிக்கப்பட்டான்.

1. பழை ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் பிரிக்கும் கோடுதான் இயேசுவின் மரணம்.

உங்கள் பாவங்களினாலேயும் உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமை யினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே கூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாயிருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து சிலுவையின்மேல் ஆணியடித்து (கொலோ.2:13,14) என குறிப்பிடுகிறார். அது பவுலுடைய வார்த்தைகளில் மோசேயின் பிரமாணத்தையும் சேர்த்துக் கொள்ளுகிறார் என்று நிரூபனமாகிறது. நாம் வசனத்தில் அவைகளெல்லாம் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது என்று பவுல் சொல்லுகிறார்.

ஆனால் அவைகளெல்லாம் கிறிஸ்துவைக் குறிக்கும் பொருளாயிருக்கிறது என்கிறார். நாம் பழைய பிரமாணத்துக்கு கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட முயற்சித்தால் நாம் நிழலால் இரட்சிக்கப்பட முயற்சிக்கிறோம் நிஜத்தாலல்ல.

2. புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இயேசு இருக்கிறார் (எபி.9:15-17).

3. அந்தக் கள்ளன் பழைய உடன்படிக்கை நடைமுறையிலிருந்து எடுத்துப்போடப்படுமுன் மன்னிக்கப்பட்டு விட்டதினாலே, அவன் இன்றுள்ள கிறிஸ்தவரல்லாதவர்களுடைய இரட்சிப்புக்கு மாதிரியல்ல.

4. ஞானஸ்நானம் இல்லாமல் இயேசுவால் பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்களும் உண்டு.

இயேசுவானவர் திமிர்வாதக்காரனை மன்னித்தார் (மாற்கு 2)
இயேசுவானவர் ஒரு ஸ்திரீயை மன்னித்தார் (லூக்கா 7)
சகேயுவுக்கு பாவமன்னிப்பை வாக்களித்தார் (லூக்கா 19)

5. இயேசுவானவர் சொன்னார் “பூமியிலே பாவங்களை மன்னிப்பதற்கு மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டு என்று” அவரால் பூமியிலிருந்தபோது அவர் தகுதியுள்ள யாருக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று நினைத்தாரோ அவர்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பகிர்ந்தளிக்க முடிந்தது.